# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2286/14 – 2022 ජූනි මස 27 වැනි සඳුදා – 2022.06.27

***2286/14 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் நாலக ஜூட் ஹரின் பெர்னான்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்ட, களனிய பிரதேச செயலாளர் பிரிவில், 257A ஹிம்புட்டுவெல்கொட கிராம அலுவலர் பிரிவில், ஹிம்புட்டுவெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட GA/ KEL/ *2021/ 427* மற்றும் *2021.12.21* ஆந் திகதி கொண்ட மூலப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் காணித்துண்டுக்கான எல்லைகள்:

*01.* **துண்டு ‘A’ – தொம்பகஹ கும்புற, கோண்கஹ கும்புர - விஸ்தீரணம் - 0.0166 ஹெக்டயார்**

வடக்கு : இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் தொம்பகஹ மற்றும் கோண்கஹ கும்புர மற்றும் பிரதேச சபை வீதி; கிழக்கு : பிரதேச சபை வீதி; தெற்கு : இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் தொம்பகஹ மற்றும் கோண்கஹ கும்புர; மேற்கு :இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் தொம்பகஹ கும்புர மற்றும் கோண்கஹ கும்புர.

ஹரின் பெர்னான்டோ,
சுற்றுலா மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : *4-3/12/2021/*CEB*/212.*
காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
*2022*, யூன் *03*.

EOG *06- 0201*